# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 088 · சனிக்கிழமை Saturday · 27.06.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode


## போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு:

# மக்களோடு மாரத்தான் ஓட்டத்தில் பங்கேற்ற முதலமைச்சர் விஜய்



சென்னை: சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தானை தொடக்கி வைத்த முதலமைச்சர் ச. ஜோசப் விஜய், மெரினா கடற்கரை சாலையில் மக்களோடு மக்களாக மாரத்தான் ஓட்டத்திலும் பங்கேற்றார்.

சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் 'start run, stop drugs' என்ற பெயரில் விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை முதலமைச்சர் விஜய் தொடங்கி வைத்தார். சென்னை காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடம் அருகே, இந்த மாரத்தான் ஓட்டம் தொடங்கியது.

மெரினா சாலையில் விஜய்

மாரத்தானைதொடங்கி வைத்ததோடு, மக்களோடு மக்களாக இணைந்து முதலமைச்சரும் ஓட்டத்தில் பங்கேற்றார். அவருடன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் என்.ஆனந்த், நிதியமைச்சர் மரிய வில்சன், உணவு பாதுகாப்புத்துறை வெங்கட்ரமணன் ஆகிய அமைச்சர்களும் பங்கேற்றனர்.

மேலும், டிஜிபி, காவல் ஆணையர், தலைமை செயலர் மற்றும் அரசு அலுவலர்கள் பலரும் போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தில் முதலமைச்சருடன் பங்கேற்றனர். முன்னணி விளையாட்டு, வீரர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் புடைசூழ ஓடிய முதலமைச்சர், ஓடியவாறே தண்ணீர் குடித்துவிட்டு, அருகில் சென்ற பெண்களுக்கும் தண்ணீர் வழங்கினார்.

மாரத்தான் ஓட்டத்தை தொடங்குகையில், நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாக மாட்டேன். 'போதைப் பழக்கத்திற்கு ஆளானவர்கள் அதிலிருந்து வெளிவர எனது பங்களிப்பை தருவேன். 'தமிழ்நாட்டில் போதைப் பொருட்களை வேரறுக்க துணைநிற்பேன்' போன்ற உறுதிமொழியை முதலமைச்சர் உள்ளிட்ட அனைவரும் ஏற்றனர்.

போதைப் பொருளை ஒழிக்க தீவிரம் காட்டும் விஜய்

கட்சி தொடங்கியதிலிருந்தே தமிழ்நாட்டில் போதைப் பொருட்களை ஒழிக்க, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் விஜய்கூறிவந்தார்.அவர் கூறியபடியே, முதலமைச்சராகபொறுப்பேற்றதிலிருந்தே போதைப் பொருட்களை ஒழிக்க த.வெ.க அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

'போதையில்லாதமிழ்நாடு' என்ற இலக்கை அடைய காவல்துறை தீவிரமாக செயல்பட்டு வருவதோடு, அரசு சார்பில் பல்வேறு சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, முதலமைச்சராக பொறுப்பேற்றவுடனே,ஒவ்வொருமாவட்டத்திற்கும்பிரத்யேகமாக போதைப்பொருள் தடுப்பு பணி பிரிவுகளை உருவாக்கினார் விஜய். இதன்கீழ், தமிழ்நாட்டில் போதைப்பொருள் பயன்படுத்துவோர் மற்றும் கடத்தலில் ஈடுபட்டு விநியோகம் செய்வோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் சர்வதேச போதைப் பொருள் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு, இன்று தமிழ்நாடு அரசு சார்பில் நடைபெறுகிற மாரத்தான் போட்டியில் முதலமைச்சரும் பங்கேற்றுள்ளார்.

# திருச்சி கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியா? திமுக தலைவர் ஸ்டாலின் பதில்



திருச்சி கிழக்கு இடைத் தேர்தலில் போட்டியா எனும் கேள்விக்கு திமுக தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் பதில் அளித்துள்ளார்.

2026ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் திமுக தலைவரும்,முன்னாள் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் வெற்றி வாய்ப்பை இழந்தார். இதேபோல், தவெக தலைவர் ச. ஜோசப் விஜய் திருச்சி கிழக்கு மற்றும் பெரம்பூர் ஆகிய இரண்டு தொகுதிகளில் வென்றார்.

இதனைத் தொடர்ந்து முதலமைச்சர் ச.ஜோசப் விஜய்,பெரம்பூர் தொகுதி எம்.எல்.ஏ.பதவியைதக்கவைத்துக்கொண்டு, திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார். இவரைத் தொடர்ந்து அதிமுகவின் மதுராந்தகம், தாராபுரம், பெருந்துறை, அம்பாசமுத்திரம் மற்றும் விராலிமலை ஆகிய தொகுதிகளின் எம்.எல்.ஏ.க்களும் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்தனர். தற்போது தமிழ்நாட்டில் ஆறு சட்டமன்றத் தொகுதிகள் காலியாக உள்ளன. இவற்றுக்கு விரைவில் இடைத் தேர்தல் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.இதற்கிடையில்,திமுகதிருச்சிதெற்கு மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் திருச்சி கிழக்கு இடைத் தேர்தலில் தங்கள் கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் போட்டியிட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில், சட்டமன்றத்தில்பேசியமுதலமைச்சர் ச. ஜோசப் விஜய், 'அப்பாவை காணோம்' எனும் குட்டி கதையை சொல்லி முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தோல்வியை மறைமுகமாக விமர்சித்திருந்தார். இதற்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் முதலமைச்சர் ச. ஜோசப் விஜய்க்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம், புதுக்கோட்டையில் நடந்த திமுக நிர்வாகி இல்ல நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, "சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய், அப்பாவை காணோம் என்கிறார்.வருவார்..எவ்வளவு விரைவாக வர வேண்டுமோ,அவ்வளவுவிரைவாக மீண்டும் சட்டமன்றத்திற்கு வருவார். இது உறுதி" எனத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து காலியாக இருக்கும் ஆறு சட்டமன்றத் தொகுதிகளுக்கு நடைபெற இருக்கும் இடைத் தேர்தலில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் போட்டியிடுகிறாரா எனும் கேள்வி எழுந்தது.

இந்நிலையில் இன்று அண்ணா அறிவாலயம் வந்த திமுக தலைவர் மு.க. ஸ்டாலினிடம் செய்தியாளர்கள், "திருச்சி கிழக்கு இடைத் தேர்தலில் நீங்கள் போட்டியா?" என கேள்வி எழுப்பினர்.இதற்குபதில் அளித்த திமுக தலைவர் மு.க. ஸ்டாலின், "இன்னும் முடிவெடுக்கவில்லை. அதுகுறித்து முடிவெடுத்ததும் சொல்கிறேன்" எனத் தெரிவித்தார்.

# ஜூலை 1ல் அதிமுக மகளிரணி நிர்வாகிகள் கூட்டம்; எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

அதிமுகபொதுச்செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது :-

அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழக மகளிர் அணியின் செயல்பாடுகள் குறித்தும்; கழக வளர்ச்சிப் பணிகளில் மகளிரின் பங்கு குறித்தும், "கழக மகளிர் அணி மாநில நிர்வாகிகள்; மாவட்ட மகளிர் அணிச் செயலாளர்கள்;

கழகஅமைப்புரீதியாக செயல்பட்டு வரும் மாவட்டங்களைச் சேர்ந்த, மாவட்டக் கழக இணைச் செயலாளர், மாவட்டக் கழக துணைச் செயலாளர்; தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் கழகப்பொதுக்குழு உறுப்பினர்கள், மகளிர் கழக செய்தித் தொடர்பாளர்கள் ஆலோசனை கூட்டம்" சென்னை, இராயப்பேட்டை, அவ்வை சண்முகம் சாலையில் உள்ள தலைமைக் கழக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மாளிகையில், வருகின்ற 1.7.2026 – புதன் கிழமை காலை 10 மணியளவில் நடைபெற உள்ளது. இந்த ஆலோசனைக்கூட்டத்தில்,கழகப் பொதுச் செயலாளர், தமிழ் நாடு முன்னாள் முதல்–அமைச்சர் 'புரட்சித் தமிழர் எடப்பாடி கே. பழனிசாமி பங்கேற்று ஆலோசனை வழங்க உள்ளார்கள்.



இக்கூட்டத்தில் மூத்த தலைமைக் கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

ஆகவே, மேற்கண்ட பொறுப்புகளில் பணியாற்றி வரும் மகளிர் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959


# வானிலை முன்னறிவிப்பு: சென்னை உள்ளிட்ட 6 மாவட்டங்களுக்கு கனமழை வாய்ப்பு

சென்னை: தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட 6 மாவட்டங்களில் (ஜூன் 27) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடலோர ஆந்திரப் பிரதேசத்திலிருந்து மத்திய மகாராஷ்டிரா வரை தெலங்கானா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகள், மராத்வாடா பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சியின் வழியாக



சுமார் 3.1 கி.மீ. முதல் 4.5 கி.மீ. உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் ம் (ஜூன் 27), நாளை மறுதினமும் ஒரு சில இடங்களிலும், 29 முதல் ஜூலை 2-ம் தேதி வரை ஒரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, மதுரை, கன்னியாகுமரி மாவட்டங்களிலும், 29-ம் தேதி கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களின் மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி மாவட்டங்களில் ஒரிரு இடங்களிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான அல்லது கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# கோவையில் இந்தியாவின் மிகப்பெரிய உணவுத்துறை சார்ந்த கண்காட்சி ஜூலை 1ம் தேதி முதல் 3 ம் தேதி வரை கொடிசியா வளாகத்தில் நடைபெறுகிறது

## சுமார் 36 நாடுகளைச் சேர்ந்த 30,000க்கும் மேற்பட்ட தொழில்துறை வல்லுநர்கள் பங்கேற்க உள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்



தென்னிந்தியாவின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த தொழில்துறை கண்காட்சியாக கருதபடும், உணவுத் துறையை மையமாகக் கொண்ட ஆறு முக்கிய கண்காட்சிகளான, இந்தியாவின் மிகப்பெரிய உணவுத் துறை சார்ந்த கண்காட்சி வரும், ஜூலை 1ம் தேதி முதல் 3ம் தேதி வரை கோவை கொடிசியா வளாகத்தில் நடைபெற உள்ளது இது குறித்த விளம்பர பலகை வெளியீட்டு விழா நிகழ்ச்சி கோவை அவினாசி சாலையில் உள்ள தனியார் உணவக அரங்கில் நடைபெற்றது. அப்பொழுது செய்தியாளர்களிடம் பேசிய சினர்ஜி எக்ஸ்போஷர்ஸ் அன்ட் ஈவென்ட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர் பிரிஜேஷ் எட்வர்ட்ஸ் கூறியதாவது. தென்னிந்தியாவில் உள்ள உணவு வணிக நிறுவனங்களுக்கு, உணவு பதப்படுத்துதல், பேக்கரி, உணவு உற்பத்தி இயந்திரங்கள், பேக்கேஜிங் மற்றும் விருந்தோம்பல் துறைகளில் உருவாகி வரும் நவீன தொழில்நுட்பங்களையும் புதுமைகளையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது இக்கண்காட்சி.

இந்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில்துறை அமைச்சகம், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகம், இந்திய மசாலா வாரியம், தேசிய மஞ்சள் வாரியம் மற்றும் பல்வேறு முன்னணி தொழில்துறை அமைப்புகளின் ஆதரவுடன் நடைபெறும் இந்தக் கண்காட்சியில், 36 நாடுகளைச் சேர்ந்த 30,000-க்கும் மேற்பட்ட தொழில்துறை வல்லுநர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாபெரும் தொழில்துறை நிகழ்வில், உணவு பதப்படுத்துதல், பானங்கள், பால் மற்றும் பால் சார்ந்த பொருட்கள், பேக்கரி மற்றும் இனிப்புதயாரிப்புகள், உணவு பேக்கேஜிங், ஹோட்டல் மற்றும் விருந்தோம்பல் துறை, வேளாண் தொழில் மற்றும் உணவு ஏற்றுமதி உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், விநியோகஸ்தர்கள், சில்லறை விற்பனையாளர்கள், ஹோட்டல் துறையினர், தொழில்முனைவோர், ஆலோசகர்கள் மற்றும் தொழில்நுட்பவழங்குநர்கள் ஒரே இடத்தில் ஒன்று கூடுகின்றனர் என தெரிவித்தார் இந்த நிகழ்ச்சியில் நீலகிரி அக்கார்ட் ஹைலேண்ட் உணவக இயக்குநா அருண் அண்ணாதுரை, டிஏபிபி ஸ்னாக்ஸ் நிறுவனர் பிரபு காந்தி குமார், ஸ்கால் இன்டர்நேஷனல் தலைவர் ரமேஷ் சந்திரன், ஜே. எம் பேக்கர்ஸ் அகாடமி இயக்குநர் லாரன்ஸ், சினர்ஜி எக்ஸ்போஷர்ஸ் அண்ட் ஈவென்ட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் தலைவர் ரஞ்சித், தமிழ்நாடு கேட்டரர்ஸ் அசோசியேஷன் தலைவர் முகேஷ் விஜ், மற்றும் விஷால் விஜ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.




### கோவை அரசூர் பகுதியில் உள்ள

# கே.பி.ஆர். கலைக் கல்லூரியில் முதலாமாண்டு கலைப்பிரிவு மாணவர்களுக்கு வரவேற்பு விழா நிகழ்ச்சி கல்லூரி அரங்கில் நடைபெற்றது

கோவை அரசூர் பகுதியில் உள்ள, கே.பி.ஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியில் பிரவர்த்தனா- 2026 என்னும் முதலாமாண்டு கலைப் பிரிவான, வணிகவியல் மற்றும் மேலாண்மைப் பிரிவு மாணவர்களை வரவேற்கும் விழா நடைபெற்றது. கே.பி. ஆர் கல்விக் குழுமங்களின் தலைவர் டாக்டர் கே.பி. ராமசாமி இந்நிகழ்விற்கு தலைமை வகித்துச் சிறப்பித்தார். கல்லூரியின் செயலர் காயத்ரி அனந்தகிருஷ்ணன் இந்நிகழ்விற்கு வாழ்த்துரை வழங்கினார். கல்லூரியின் முதல்வர் முனைவர் பி. கீதா வரவேற்புரை வழங்கினார். எழுத்தாளரும் பேச்சாளருமான கலைமாமணி மரபின் மைந்தன் ம.முத்தையா அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொ க ா ண் டு சிறப்புரையாற்றினார். அவர் தமது உரையில் கல்வி அனைவருக்கும் கிடைக்க வேண்டிய அறிவுச்செல்வம். மாணவர்கள் தங்களுக்கான இலக்குகளைத் தீர்மானித்து, அதற்கான திறமைகளை வளர்த்துக் கொண்டு, உயர்ந்த நிறுவனங்களுக்கு பணிக்குச் செல்வது தங்களது பெற்றோருக்கும், பயிலும் கல்விநிறுவனத்திற்கும் செய்யவிருக்கும் மிகப்பெரிய கடமையாகும் என்றார்.

இந்நிகழ்வில் புலமுதன்மையர்கள் துறைத்தலைவர்கள் போன்றோர் அறிமுகம் செய்யப்பட்டனர். மேலும் பன்னிரண்டாம் வகுப்பில் அதிக சதவீதத்துடன் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மற்றும் விளையாட்டுத் துறையில் தேசிய அளவில் முன்னிலை வகித்த 204 மாணவர்களுக்கு ரூ.2 கோடி மதிப்பிலான கல்வி உதவித்தொகையுடன் பயிலும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இக்கல்லூரியைத் தெரிவு செய்ததன் நோக்கம் குறித்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தங்களது கருத்துக்களைப் பகிர்ந்தனர். நிகழ்வின் நிறைவாக வணிகவியல் துறையைச் சேர்ந்த இரண்டாம் ஆண்டு மாணவி செல்வி எஸ் அபிஸ்ரீ நன்றியுரை நவின்றார். இந்நிகழ்வில் வணிகவியல், ஒருங்கிணைந்த வணிகவியல் மற்றும் மேலாண்மைப் புலங்களைச் சேர்ந்த மாணவர்கள், பெற்றோர்கள், பேராசிரியர்கள், அலுவல் நிலைப்பணியாளர்கள் என 3400க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

# இந்தியாவில் தனி மனித சித்திரவதைகளுக்கு எதிராக தனி சட்டம் இல்லாத நிலை நீடிக்கிறது

## கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பி.சுந்தர்ராஜன் தெரிவித்தார்



இந்தியாவில் தனி மனித சித்திரவதைகளுக்கு எதிராக தனி சட்டம் இல்லாத நிலையில், 1997-ல் ஐ.நா. உடன்படிக்கையை இந்தியா ஏற்றுக்கொண்டும், இதுவரையிலும் உள்நாட்டுச்சட்டமாக்கப்படவில்லை என சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பி.சுந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.

கோயமூத்தூர் வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் சித்திரவதை குறித்த அரசியல் நிர்ணய சட்டப் பார்வை என்ற தலைப்பில் வியாழக்கிழமை கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் பி. சுந்தரராஜன் உரையாற்றினார். அவர் கூறியதாவது..

அரசு நிர்வாகத்தின் மூலம் சித்திரவதைக்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. முதலில் எதிரி நாட்டு மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட சித்திரவதை, இன்று தன் நாட்டு மக்களையே அடக்கி, அதிகாரத்தைத் தக்கவைக்கப் பயன்படுத்தப்படுகிறது.

ஐ.நா. சித்திரவதை எதிர்ப்பு உடன்படிக்கையின்படி, அரசு அல்லது அதன் அதிகாரிகள் மூலம் மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதை செய்வது குற்றமாகும். இதன் விளைவுகள் உடல், மன ரீதியாகப் பேரழிவை ஏற்படுத்துவதுடன், சமூகத்தை அச்சத்திற்கு உள்ளாக்கி, சுதந்திர சிந்தனையையும் முன்னேற்றத்தையும் தடுக்கிறது. இந்தியாவில் தனி சட்டம் இல்லாத நிலையில், 1997-ல் ஐ.நா. உடன்படிக்கையை இந்தியா ஏற்றுக்கொண்டும், இதுவரை உள்நாட்டுச் சட்டமாக்கப்படவில்லை. 2010, 2017, 2018, 2019 ஆகிய ஆண்டுகளில் தடுப்புச்சட்ட மசோதாக்கள் கொண்டுவரப்பட்டும் நிறைவே ற்றப்படவில்லை. காவல்துறையின் என்கவுண்டர்கள் சட்டவிரோத காவல், தடுப்பு ஆகியவை சரியாக விசாரிக்க ப்படுவதில்லை. தேசிய மனித உரிமை ஆணைய வழிகாட்டுதல்கள் கூட அ ம ல் ப டு த் த ப் ப ட வில்லை என்றார். அரசியல் சட்டப் பார்வை

அரசியல் சட்டம் மனித உரிமைகளைப் பாதுகாக்க உருவாக்கப்பட்டது. உறுப்பு14 சமத்துவ உரிமை, உறுப்பு 20 குற்றங்களுக்கான தண்டனை நடைமுறை, உறுப்பு 21 உயிர் மற்றும் தனிப்பட்ட சுதந்திர உரிமை ஆகியவை, காவல் நிலையங்களில் நடைபெறும் சித்திரவதை, வற்புறுத்தல் வாக்குமூலம், இரட்டை ஆபத்துதடுப்பு உள்ளிட்ட உரிமைகள் மீறப்படுவதில் இருந்து பாதுகாப்பு அளிக்கின்றன. அதிகாரத்தில் உள்ளோர் சட்டத்தை மீறி சமூகத்தை நிலைநாட்ட வேண்டும் என்பது புதிய கோட்பாடாகிவிட்டது. மனித உரிமைகளைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை எனும் போக்கு உள்ளது. வளர்ச்சிக்காகச் சுற்றுச்சூழலைப் பலியிடும் அணுகுமுறையும், அதிகார வர்க்கம் தங்களை மட்டும் பாதுகாத்துக் கொள்ளும் மனப்பான்மையும் அதிகரித்து ள்ளது. சர்வதேச அளவில் இந்தியாவின் மனித உரிமைப் பதிவு காரணமாக, பல நாடுகள் இங்கிலாந்து உள்ளிட்ட இந்தியர்களை நாடு கடத்த மறுக்கின்றன. இது ஒரு குறிப்பிட்ட ஆட்சியின் பிரச்னை அல்ல, எல்லா ஆட்சிகளிலும் தொடரும் பிரச்னை தொடர்கிறது. தனிமனித சித்திரவதையைத்தடுக்க சட்டரீதியான நடவடிக்கைகள் அவசியம் என்றார் இந்நிகழ்வில் கோவை வழக்கறிஞர்கள் சங்க மனித உரிமை பிரிவு அமைப்பாளர் வி.பி.சாரதி, தலைவர் ஆர். பாலகிருஷ்ணன், செயலாளர் கே.சதீஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தூத்துக்குடி முத்துமாரியம்மன் கோவிலில் கொடை விழாவை முன்னிட்டு 504 குத்துவிளக்கு பூஜை நடைபெற்றது



தூத்துக்குடி மேல சண்முகபுரம் வண்ணார் 3வது தெரு தொடர்ச்சியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் கொடை விழா கடந்த 23ஆம் தேதி கால் நாட்டு விழாவுடன் தொடங்கியது. 2ம் நாள் நிகழ்ச்சியாக முத்துமாரி அம்மனுக்கு அபிஷேகம் நடந்தது. பின்னர், முத்து மாரியம்மன் மீனாட்சி அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சி கொடுத்தார்.

அதன்பின் கோவில் வளாகத்தில் தமிழகத்தில் தொழில் வளம் சிறக்கவும் மழை வளம் வேண்டியும் 504 குத்துவிளக்கு பூஜை நடந்தது. நிகழ்ச்சிக்கு கோவில் தர்மகர்த்தா கோட்டுராஜா தலைமை தாங்கினார். தூத்துக்குடி நாடார் மகமைதலைவர் தொழிலதிபர் கே.ஏ.பி.சீனிவாசன் குத்துவிளக்கு பூஜையை தொடங்கி வைத்தார். பின்னர் குத்து விளக்கு பூஜையில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பக்தர்களுக்கு தங்க நாணயம் காமாட்சி விளக்கு உட்பட பல பரிசுகளை தூத்துக்குடி கிராம நிர்வாக அதிகாரி ராஜலட்சுமி மேற்கு மண்டல மாநகராட்சி தலைவர் அன்னலட்சுமி ஐக்கிய வியாபாரிகள் சங்க துணை தலைவர் எஸ். சண்முகராஜ் ஆகியோர் வழங்கினார்கள்.

பின்னர் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. வருகிற 30-ஆம் தேதி கோவில் கொடை விழாவை முன்னிட்டு இரவு முளைப்பாரி ஊர்வலம் சாமக்கொடை நடக்கிறது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோவில் தர்மகர்த்தா கோட்டுராஜா மற்றும் கோவில் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# விருத்தாசலம் தொகுதி வி.சி.க. பொறுப்பாளர்கள் நியமனம்: மாவட்ட செயலாளர் வீர.திராவிட மணிக்கு நேரில் நன்றி தெரிவித்த நிர்வாகிகள்

விடுதலைச் சிறுத்தை கள் கட்சியின் தலைவர் மற்றும் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், விருத்தாசலம் தொகுதி மாவட்ட அமைப்பை மேலும்



வலுப்படுத்தும் நோக்கில் புதிய மாவட்டப் பொறுப்பாளர்களை அண்மையில் நியமித்து அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இந்த நியமனங்கள் கட்சித் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளன. புதியமாவட்டப் பொறுப்பாளர்களின் நியமன த்திற்கு பரிந்துரைசெய்த விருத்தாசலம்தொகுதி மாவட்ட செயலாளர் வீர திராவிட மணியை, சேதுவராயன்குப்பத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் கட்சியின் நிர்வாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றதுடன், நன்றியையும் தெரிவித்தனர். இந்த சந்திப்பு நிகழ்ச்சியை நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கோ. கொத்தனூர்பெ.சுரேஷ் தலைமையேற்றார். அவருடன் ஒன்றிய துணைச் செயலாளர்களான பழக்கடை பிரகாஷ், எ. சித்தூர் சத்குரு, சிறுநெசலூர் சிவா மற்றும் திருப்பெயர் சத்தியகலா ஆகியோர் கலந்து கொண்டு மாவட்ட செயலாளர் வீர திராவிட மணியை சந்தித்து வாழ்த்து பெற்றனர். மேலும், இந்த நிகழ்வில் நல்லூர் மேற்கு ஒன்றிய செயலாளர் கெ ங க ா . முத்துவளவன், நில உரிமை மீட்பு இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளர் ஐவதுகுடி வி.சி. மணி, மாவட்ட துணைச் செயலாளர் நாரையூர் பெரியசாமி, மகளிரணி நிர்வாகி துர்காதேவி உள்ளிட்டோர் உடனிருந்தனர். கட்சியின் நிர்வாகிகளான சாத்தியம் இளையராஜா, திருப்பெயர் சேவாக், கொ. கொத்தனூர் அரவிந்த், சசிகுமார், ராகுல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நி க ழ் ச் சி யை சிறப்பித்தனர். புதிய பொறுப்பாளர்கள் நியமனத்தின் மூலம் விருத்தாசலம் தொகுதியில் கட்சியின் அமைப்பு மேலும் வலுப்பெறும் என நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# நல்லூர் சி.எஸ்.ஐ. ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி சாலைபாதுகாப்பு அமைப்பு சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி



தென்காசி மாவட்டம், ஆலங்குளத்தில் தமிழக அரசு உத்தரவின்பேரில் நல்லூர் சி.எஸ்.ஐ.ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி சாலை பாதுகாப்பு அமைப்பின் சார்பாக சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது

கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் எஸ் . ஜேசு ஜெகன் அவரது ஏ ற் ப ா ட் டி ல் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் எஸ் வில்சன், மற்றும் ஆலங்குளம் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் முருகன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆலங்குளம் காவல் உதவி ஆய்வாளர் ஆசீர் ஜெபக்குமார் தலைமையேற்று, கொடி அசைத்து பேரணியை தொடங்கி வைத்தார். இந்த பேரணி ஆலங்குளம் பழைய பேருந்து நிறுத்தம் தொடங்கி ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நிறைவடைந்தது.

இப்பேரணியில் கல்லூரியின் மாணவ, மாணவியர் 120 பேர் கலந்து கொண்டு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியும், இரு சக்கர வாகனங்களில் தலைக்கவசம் அணிந்தும் சாலை பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தினர்.

இ ப் பே ர ணி யி ல் ஆலங்குளம் நகர பொதுமக்கள், வியாபாரிகள், நுகர்வோர்கள் மற்றும் பயணிகள் உள்ளிட்ட அனைத்து தர மக்களும் இப்பேரணியின் நோக்கத்தை அறிந்து கொண்டனர்.

இப்பேரணியில் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் சசி, புனிதா மற்றும் முனைவர் வில்சன் எவர்பிரைட் இரத்ததான கழக ஒருங்கிணைப்பாளர் முனைவர். ஜூலியன்ஸ் ராஜாசிங், வணிகவியல் துறை பேராசிரியர் முனைவர். மரிய கலைசெல்வி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பேரணிக்கான ஏற்பாடுகளை கல்லூரி சாலை பாதுகாப்பு சங்க ஒருங்கிணைப்பாளர் ஆங்கிலத் துறைப் பேராசிரியர் எஸ் ஆபிரகாம் ஏற்பாடு செய்தார்.




ஈரோடு மாநகராட்சி, வ.உ.சி. பூங்கா விளையாட்டு மைதானம் நீச்சல்குளம் முகப்பு பகுதியிலிருந்து, சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முள்ளிட்டு "ஸ்டார்ட் Run, ஸ்டாப் Drugs போதை பொருள் எதிர்ப்பு ஓட்டம் 2026" போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நேற்று (26.06.2026) அனைவரும் ஏற்றுக்கொண்டனர். உடன் ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி ,மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ராஜகோபால் உட்பட பலர் உள்ளனர்.




ஈரோடு மாநகராட்சி, வ.உ.சி. பூங்கா விளையாட்டு மைதானம் நீச்சல்குளம் முகப்பு பகுதியிலிருந்து, சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு "ஸ்டார்ட் Run, ஸ்டாப் Drugs போதை பொருள் எதிர்ப்பு ஓட்டம் 2026" போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (26.06.2026) கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மாவட்டகாவல்கண்காணிப்பாளர்கிரண்ஸ்ருதி, மாவட்டவிளையாட்டு மற்றும்இளைஞர்நலன்அலுவலர்ராஜகோபால் உட்பட பலர் உள்ளனர்.

# பேனரில் பின்னுக்கு தள்ளப்பட்ட பெயர்! விருதுநகரில் அரசு நிகழ்ச்சியில் அமைச்சர் ஜெகதீஸ்வரி எழுப்பிய கேள்வியால் பரபரப்பு



விருதுநகர்:

விருதுநகரில் நடைபெற்றஅரசு நிகழ்ச்சியில் வைக்கப்பட்டிருந்த பேனரில் தனது பெயர் ஏன் முதலில் இடம்பெறவில்லை என மாவட்ட ஆட்சியரிடம் அமைச்சர் ஜெகதீஸ்வரி கேள்வி எழுப்பியதால் பரபரப்பு ஏற்பட்டது.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று சர்வதேசபோதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் "ஸ்டார்ட் ரன்; ஸ்டாப் டிரக்ஸ்" போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு ஓட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா முன்னிலை வகித்தார். சமூக நலத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி தலைமை வகித்து விழிப்புணர்வு ஓட்டத்தை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை, குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு இணைந்து நடத்திய விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினையும்,விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தையும் அமைச்சர் ஜெகதீஸ்வரிதொடங்கிவைத்தார். பின்னர் சிலம்பம் பயிற்சியில் சிறப்பிடம் பெற்றமாணவ,மாணவிகளுக்கு அமைச்சர் ஜெகதீஸ்வரி பரிசுகள் வழங்கினார்.

அப்போது, நிகழ்ச்சிகளில் வைக்கப்பட்டிருந்த பேனர்களில் தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா பெயர் முதலிலும் சமூக நலத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி பெயர் அதற்கு அடுத்தும் இடம் பெற்றிருந்தது. இதனைக் கண்ட அமைச்சர் ஜெகதீஸ்வரி, "நான்தான் விருதுநகர் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர், எனது பெயரை ஏன் முதலில்பேனரில்போடவில்லை. நிகழ்ச்சிக்கு வராத அமைச்சரின் பெயர் முதலில் போட்டு உள்ளீர்கள்" என்று அங்கிருந்து மாவட்ட ஆட்சியர் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலரிடம் கேள்வி எழுப்பினார். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

அதைத்தொடர்ந்து விருதுநகர் அரசு மருத்துவமனையில் அமைச்சர் ஜெகதீஸ்வரி ஆய்வு மேற்கொண்டார். அப்போது இது பற்றி அவரிடம் கேட்டபோது, "நிகழ்ச்சியில் வைக்கப்படும்பேனர்தொடர்பான புகைப்படங்கள் எனக்கு நேற்று மாலை அனுப்பி வைத்தனர். அதில் எனது பெயர் ஏன் இரண்டாவது இடத்தில் உள்ளது என்றும், எனது பெயரை முதலில் குறிப்பிடும்படியும் அறிவுறுத்தினேன். ஆனாலும் அதை அதிகாரிகள் மாற்றவில்லை. அதனால் தான் இன்று காலை நடைபெற்ற நிகழ்ச்சியின் போது மாவட்ட ஆட்சியரிடமும் அதிகாரிகளிடமும் கேள்வி எழுப்பினேன்" என்றார்.

பின்னர், டீன் அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது திடீரென அமைச்சர் ஜெகதீஸ்வரிக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டு மயக்கம் அடைந்தார். உடனடியாக அவருக்கு ட்ரிப்ஸ் ஏற்றப்பட்டது. அமைச்சர் ஜெகதீஸ்வரிக்கு ரத்த அழுத்த பரிசோதனை, நீரழிவு நோய் பரிசோதனை செய்யப்பட்டது. எக்கோ பரிசோதனையும் செய்யப்பட்டது.

# ஜூலை 1ம் தேதி முதல் பாஸ்போர்ட் கட்டணங்கள் உயர்வு

புது டெல்லி: பாஸ்போர்ட் கட்டணங்கள் ஜூலை 1ம் தேதி முதல் உயர்த்தப் படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.




இதன்படி, 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு சாதாரண திட்டத்தின் கீழ்,புதிய 36 பக்க பாஸ் போர்ட் அல்லது அதை மீண்டும் பெறுவதற்கான கட்டணம் தற்போதுள்ள ரூ.1,500-லிருந்து ரூ.2,500 ஆக உயரும். அதே நேரத்தில், தத்கல்கட்டணம்ரூ.3,500-லிருந்து ரூ. 5,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இதேபோல், 60 பக்க பாஸ்போர்ட்டுக்கான கட்டணம் சாதாரண பிரிவின்கீழ்ரூ.2,000-லிருந்து ரூ.3,500 ஆகவும்,தத்கல்பிரிவின் கீழ் ரூ.4,000-லிருந்து ரூ.6,000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த 2012ம் ஆண்டுக்குப் பிறகுதற்போது தான் பாஸ்போர்ட் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. தொலைந்து போன அல்லது சேதமடைந்த பாஸ்போர்ட்டுகளுக்குப் பதிலாக மாற்று 36 பக்க பாஸ்போர்ட்டுக்கு சாதாரணதிட்டத்தின் கீழ் ரூ.5,000 மற்றும் தத்கல் திட்டத்தின் கீழ் ரூ.7,500 கட்டணம் வசூலிக்கப்படும்.

அதே நேரத்தில் 60 பக்க மாற்று பாஸ்போர்ட்டுக்கு முறையே ரூ.6,000 மற்றும் ரூ.8,500 கட்டணம் ஆகும். 18 வயதுக்குட்பட்ட விண்ணப்பதாரர்களுக்குபுதிய அல்லது மீண்டும் வழங்கப்படும் 36 பக்க பாஸ்போர்ட்டுக்கு சாதாரண திட்டத்தின் கீழ் ரூ.1,750, தத்கல் திட்டத்தின் கீழ் ரூ.4,250 கட்டணம் ஆகும்.

# கோவை மாவட்டம் கோவைப்புதூர் பகுதியில் உள்ள வி.எல்.பி. ஜானகியம்மாள் கல்வி மற்றும் அறிவியல் கல்லூரியில் 'வித்யா யாத்திரா 2026' திட்டத்தின் துவக்கவிழா நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது



கோவை மாவட்டம், கோவைபுதூர் பகுதியில் உள்ள வி.எல்.பி ஜானகியம்மாள் கல்வி மற்றும் அறிவியல் கல்லூரியில், புதிய மாணவர்களை வரவேற்கும் வகையில் "வித்யா யாத்திரா 2026" என்ற சிறப்பு அறிமுக மற்றும் வழிகாட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் ஆயிரத்திற்கும்மேற்பட்ட புதிய மாணவர்களும், அவர்களதுபெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

கல்லூரி நிர்வாகம் சார்பில் மாணவர்களின் கல்வி, திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு வாய்ப்புகள் மற்றும் வளாக வசதிகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

வி.எல்.பி அறக்கட்டளையின் தலைவர் சூர்ய குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கல்லூரியின் முதல்வர் டாக்டர் குமார் வரவேற்புரை வழங்கினார்.

கல்லூரியின் வளர்ச்சி, கல்வித் தரம் மற்றும் மாணவர்களுக்காக மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து சிறப்புரைகள் இடம்பெற்றன.

மேலும், மாணவர்கள் கல்லூரி வாழ்க்கையில் வெற்றி பெற தேவையான ஒழுக்கம், திறன் வளர்ச்சி, தொழில்நுட்ப அறிவு மற்றும் சமூகப் பொறுப்புணர்வு குறித்து பேராசிரியர்கள் ஆலோசனைகள் வழங்கினர்.

மாணவர்களின் எதிர்கால முன்னேற்றத்திற்கு கல்லூரி நிர்வாகம் முழுமையான ஆதரவை வழங்கும் என்றும் உறுதியளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தன்னம்பிக்கை பேச்சாளரும்,பிரபல தொலைக்காட்சி தொகுப்பாளருமான மதுரைராமகிருஷ்ணன் கலந்து கொண்டு மாணவர்களிடையே உரையாடினார்..

நிகழ்ச்சியின் நிறைவில், புதிய மாணவர்களும் பெற்றோர்களும் கல்லூரியின் கல்வி சூழல் மற்றும் வசதிகளை பார்வையிட்டு மகிழ்ச்சி தெரிவித்தனர். புதிய கல்வியாண்டை உற்சாகமாக தொடங்கும் வகையில் நடைபெற்ற "வித்யா யாத்திரா 2026" நிகழ்ச்சி மாணவர்களுக்கு பயனுள்ள மற்றும் ஊக்கமளிக்கும் நிகழ்வாக அமைந்தது குறிப்பிடதக்கது..




ஈரோடு மாநகராட்சி, வ.உ.சி. பூங்கா விளையாட்டு மைதானம் நீச்சல்குளம் முகப்பு பகுதியில் சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு "ஸ்டார்ட் Run, ஸ்டாப் Drugs போதை பொருள் எதிர்ப்பு ஓட்டம் 2026" போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு குறித்த கையெழுத்து இயக்க பதாகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (26.06.2026) கையெழுத்திட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். உடன் ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி , மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ராஜகோபால் உட்பட பலர் உள்ளனர்.

# எபோலா பரவல் கண்காணிப்புக்கு புதிய போர்டல் விமான போக்குவரத்து அமைச்சகம் நடவடிக்கை



புதுடெல்லி: ஆப்பிரிக்காவின் சில பகுதிகளில் எபோலா பரவி வருவதால் பொது சுகாதார கண்காணிப்பை பலப்படுத்த மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகமும் டெல்லி சர்வதேச விமான நிலையமும் இணைந்து பயணிகள் சுகாதார சுய அறிவிப்பு போர்டலை அறிமுகப்படுத்தி உள்ளன.

சுகாதார சேவைகள் இயக்குநரகம் மற்றும் மத்திய சுகாதார அமைச்சகத்துடன் இணைந்து உருவாக்கப்பட்ட ஏர் சுவிதா 2.0 என்ற இந்த போர்டல் மூலம், இந்தியாவுக்கு வரும் சர்வதேச பயணிகள், குடியேற்ற அனுமதிக்கு முன்பு, கடந்த 21 நாட்களின் பயணம், தொடர்பு வரலாறு மற்றும் அறிகுறிகள் உள்ளிட்ட விவரங்களை ஆன்லைனில் கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.

விமான நிலைய சுகாதார அதிகாரி, குடியேற்றப் பிரிவு மற்றும் மாநிலக் கண்காணிப்பு அதிகாரிகள் ஆகியோருடன் நிகழ் நேரத் தரவுப் பகிர்வைச் சாத்தியமாக்குகிறது . அதேவேளையில், விமானம் தரையிறங்கிய பிறகு பூர்த்தி செய்ய வேண்டிய காகிதப் படிவங்கள் ஏதுமின்றி, பயணிகளின் வருகை அனுபவத்தைச் தொடுதலின்றி மேற்கொள்ளவும்,ஆபத்துவாய்ப்புள்ள பயணிகளை விரைவாக அடையாளம் கண்டு பரிந்துரைக்கவும் இது உதவுகிறது என்று சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த படிவத்தை இந்தியா வருவதற்கு 24 மணி நேரத்துக்கு முன்பே நிரப் பயணிகள் விமானத்தில் ஏறும் முன்பே அல்லது வெப் செக் -இன் நேரத்தில் இதை நிரப்ப வேண்டும் என்றும், வந்ததும் அச்சிடப்பட்ட/ டவுன்லோடு செய்யப்பட்ட படிவத்தை காட்டினால் போதும் என்றும் கூறப்பட்டுள்ளது.

# டிஜிட்டல் அரெஸ்ட் மோசடி தொடர்பாக 16 மாநிலங்களில் சிபிஐ சோதனை

புதுடெல்லி: டிஜிட்டல் அரெஸ்ட் மோசடி தொடர்பாக தமிழகம் உட்பட 16 மாநிலங்களில் சிபிஐ அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தினர். அப்போது சென்னை, கொல்கத்தாவை சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்டனர்.




கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவில் சைபர் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக டிஜிட்டல் அரெஸ்ட் என்ற பெயரில் பொதுமக்களை மிரட்டி பணம் பறிக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.இந்த சூழலில் டிஜிட்டல் அரெஸ்ட் உட்பட 200 சைபர் குற்றங்களில் தொடர்புடைய ஒரு கும்பல் தொடர்பாக சிபிஐ தீவிர விசாரணை நடத்தி வருகிறது.

இது தொடர்பாக தமிழகம், பஞ்சாப், குஜராத், அசாம், மணிப்பூர், மேற்கு வங்கம், ராஜஸ்தான் உள்ளிட்ட 16 மாநிலங்களில் சிபிஐ அதிகாரிகள் நேற்று ஒரே நேரத்தில் சோதனை நடத்தினர். சுமார் 60-க்கும் மேற்பட்ட சிறப்பு குழுக்கள் 80-க்கும் மேற்பட்ட இடங்களில் சோதனையை மேற்கொண்டனர்.

சென்னையில் ஒருவர் கைது:

இதுதொடர்பாக சிபிஐ வட்டாரங்கள் கூறியதாவது : டிஜிட்டல் அரெஸ்ட் மோசடி கும்பல் உச்ச நீதி மன்ற இணையதளம் போன்ற ஓர் இணைய தளத்தை உருவாக்கி பல்வேறு சைபர் குற்றங்களில் ஈடுபட்டு வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த கும்பல் அண்மை காலத்தில் மட்டும் பொது மக்களிடம் இருந்து ரூ .2 கோடியை மோசடி செய்திருக்கிறது.

இதைத் தொடர்ந்து நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் சோதனை நடத்தினோம். அப்போது சென்னை, கொல்கத்தாவை சேர்ந்த நரேஷ் மற்றும் சஞ்சிப் சாஹா ஆகிய 2 பேர் கைது செய்யப்பட்டனர். 80 இடங்களில் நடத்தப்பட்ட சோதனைகளில் கணினி, லேப்டாப், மொபைல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ஏராளமான வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன. நீதிமன்றங்கள், புலன்விசாரணை அமைப்புகள் பெயரில் தயாரிக்கப்பட்ட பல்வேறு போலி ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு உள்ளன.இவ்வாறு சிபிஐ வட்டாரங்கள் தெரிவித்தன.



ஈரோடு மாநகராட்சி, வ.உ.சி. பூங்கா விளையாட்டு மைதானம் நீச்சல்குளம் முகப்பு ப குதியில் சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு "ஸ்டார்ட் Run, ஸ்டாப் Drugs போதை பொருள் எதிர்ப்பு ஓட்டம் 2026" போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு மாரத்தான் ஓட்ட நிகழ்ச்சியில் அமைக்கப்பட்டிருந்த செல்பி பாயிண்டில் மாவட்டஆட்சித்தலைவர்ச.கந்தசாமிநேற்று(26.06.2026)செல்பிஎடுத்துவிழிப்புணர்வு ஏற்படுத்தினார். உடன் ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மாவட்டகாவல்கண்காணிப்பாளர்கிரண்ஸ்ருதி,மாவட்டவிளையாட்டுமற்றும்இளைஞர் நலன் அலுவலர் ராஜகோபால் ஆகியோர் உள்ளனர்.

# சிலிண்டர் கட்டுப்பாடு நீக்கம்...
# விலை குறையாததால் வணிகர்கள் கவலை...

அமெரிக்கா, ஈரான் மீது தாக்குதல் நடத்தியதில் இருந்து கச்சா எண்ணெய், சமையல் கியாஸ் சிலிண்டர் கிடைப்பதில் சிக்கல் நீடித்துவந்தது.போரின் உச்சமாக, வளைகுடா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய், கியாஸை கொண்டு செல்லக்கூடிய கப்பல்கள் கடக்கும் ஹார்முஸ் நீரிணையை ஈரான் மூடியதில் இருந்து பிரச்சினை இன்னும் தலைவிரித்தாடி வந்தது. இதில் கச்சா எண்ணெய், கியாஸை எதிர்பார்த்து இருக்கும் இந்தியா பெரும் பிரச்சினையை சந்தித்து வந்தது.



எரிபொருள் விலை உயர்வு மற்றும் பொருளாதார நெருக்கடிகள் உணவக தொழிலில் பெரும்தாக்கத்தைஏற்படுத்தியுள்ளன. வணிக சமையல் எரிவாயு விலை ஏற்றத்தால் ஏற்பட்ட இந்த நெருக்கடியை சமாளிக்க உணவகங்கள் பல்வேறு மாற்றங்களை செய்ய வேண்டிய நிலை உருவானது.

மூலப்பொருட்களின் விலை மற்றும் எரிபொருள் செலவுகளை ஈடுகட்டஓட்டல்உணவு பொருட்களின் விலைகள் கடுமையாக உயர்த்தப்பட்டன. மேலும் செலவை கட்டுப்படுத்தவும், லாபத்தை நிலைநிறுத்தவும் குறிப்பிட்ட சில உணவு பண்டங்கள் தயாரிப்பதை உணவகங்கள் தற்காலிகமாகவோ அல்லது முழுமை யாகவோ நிறுத்த வேண்டியதாயிற்று.விலை உயர்வு

வணிக சிலிண்டர் தட்டுப்பாட்டால் தனியாரிடம் அதிக விலை கொடுத்துப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது. இதனால் இந்த கூடுதல்செலவுகளைச் சமாளிக்க, ரூ.10-க்கு விற்கப்பட்டு வந்த டீ மற்றும் காபியின் விலையை முறையே 15 ரூபாய் மற்றும் 25 ரூபாயாக உயர்த்தி விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. 19 கிலோ வணிக சிலிண்டரின் விலையை ரூ. 3,327 ஆக மத்திய அரசு உயர்த்தியது. இதனால் தமிழகம் முழுவதும் உள்ள உணவகங்கள் தங்களின் வாடகை, தொழிலாளர் சம்பளம் மற்றும் இந்த எரிபொருள் செலவை ஈடுகட்ட, உணவுப் பண்டங்களின் விலையை 10% உயர்த்த வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளன.

அமெரிக்கா-ஈரான் ஒப்பந்தத்திற்குப் பின் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவின் விலை குறிப்பிடத்தக்க அளவு சரிந்துள்ளது. இது ஓட்டல் மற்றும் டீக்கடைத் தொழில் செய்யக்கூடியவர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தாலும் கூட, வணிக சிலிண்டரின் விலை குறைக்கப்படாமல் இருப்பது பாதிப்பை ஏற்படுத்துவதாக தெரிவித்துள்ளனர்.

இது குறித்து தமிழ்நாடு ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் சுப்பு கூறியதாவது:-

வணிக சிலிண்டர் விலை இரு மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. போருக்கு முன்னதாக 2,000 ரூபாய்க்கு குறைவாக இருந்த சிலிண்டர், தற்போது ரூ. 3,500 வரை உயர்ந்துள்ளது. சிலிண்டர் மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டது மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால், அதேநேரத்தில்விலையையும் குறைக்க வேண்டும்.இந்தவிலை உயர்வால் ஓட்டல் உரிமையாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலையைக் குறைப்பதற்கு வாய்ப்பில்லை. தற்போதைக்கு 10 சதவீதம் மட்டுமே விலை உயர்த்தப்பட்டுள்ளது.

தடையின்றி தயாரித்து வழங்க முடியும்

தற்போது சிலிண்டர் மட்டுமில்லாது, ஓட்டல் தொழில் சார்ந்த அனைத்து பொருட்களின் விலையும் உயர்ந்து இருப்பதால் இட்லி, தோசை, பரோட்டா, சப்பாத்தி, பொங்கல், வடை, மதிய சாப்பாடு உள்ளிட்ட உணவு பொருட்களின் விலையை குறைக்க இயலாது. சிலிண்டர் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதால், இனிமேல் ஓட்டல்களில் அனைத்து உணவு பொருட்களையும் தடையின்றி தயாரித்து வழங்க முடியும்.

இவ்வாறு அவர் கூறினார். கடந்த 4 மாதங்களாக நிலவிய கடுமையான தட்டுப்பாட்டால், அரசு நிறுவனங்களின் விநியோகஸ்தர்கள் தங்களது நிரந்தர வாடிக்கையாளர்களை இழந்துள்ளனர். வணிகத்தை பொறுத்தவரை இழந்த வாடிக்கையாளர்களை மீண்டும் ஈர்ப்பது ஒரு புதிய சவாலாகும்.

வணிகத்தை மீட்டெடுக்க வேண்டியுள்ளது

ஓட்டல்கள் மற்றும் பேக்கரிகள் தங்களின் அன்றாட வணிகத்தை நிறுத்த முடியாது என்பதால், தட்டுப்பாடு நிலவிய காலத்தில் தனியார் நிறுவனங்களின் சிலிண்டர்களுக்கு மாறினர். கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு தற்போது சிலிண்டர்கள் தாராளமாக கிடைத்தாலும், விநியோகஸ்தர்கள் மீண்டும் நேரடியாக வாடிக்கையாளர்களை சந்தித்து, தடையற்ற விநியோகத்தை உறுதி அளித்து, வணிகத்தை மீட்டெடுக்க வேண்டியுள்ளது.

# “அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதாவுக்கு பிறகு மாற்றத்தை உருவாக்க வந்தவர் முதல்வர் விஜய்”

## அமைச்சர் செங்கோட்டையன் பேச்சு



கோபி:"அண்ணா,எம்ஜிஆர், ஜெயலலிதாவுக்கு பிறகு தமிழகத்தில் ஒரு மாற்றத்தை உருவாக்க இயற்கை கொடுத்த கொடையாக முதல்வர் விஜய் இருக்கிறார்" என அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

கோபியில் நடந்த நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செங்கோட்டையன்,"இன்று ஜோசப் விஜய் என்று சொன்னாலே எல்லோரும் நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதாவுக்கு பிறகு தமிழகத்தில் ஒரு மாற்றத்தை உருவாக்க இயற்கை கொடுத்த கொடையாக முதல்வர் விஜய் இருக்கிறார். இங்கு வந்துள்ள நீங்கள் தான் என்னை வாழ வைத்தீர்கள். நீங்கள் தான் 10 முறை இந்த தொகுதியில் என்னை வெற்றிபெற வைத்தீர்கள்.

செங்கோட்டையன் எங்கே செல்கிறார் என எல்லோரும் என்னை கேலிபேசினார்கள்.நான் எம்ஜிஆரோடு பயணம் செய்தேன், அவர் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தார். நான் ஜெயலலிதாவோடு பயணம்செய்தேன்,அவரும் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தார். இப்போது விஜய்யுடன் இணைந்தேன்,இன்று ஆட்சிமாற்றப்பட்டிருக்கிறது. 60 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தவர்கள் இப்போது எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ளார்கள்.

யாராக இருந்தாலும் இனி எதிர்க்கட்சி வரிசையில்தான் அமர முடியும். முதல்வர் விஜய் இருக்கும் வரை ஆளும் கட்சியாக யாராலும் வர முடியாது. எம்ஜிஆர், ஜெயலலிதாவுக்கு பிறகு உலகத் தமிழர்களின் இதயங்களில் வாழ்பவர் விஜய். நிதி நெருக்கடியில் மாநிலம் இருந்தாலும், மக்களுக்காக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார் முதல்வர் விஜய்" என்றார்.

# என்சிஇஆர்டி 9ம் வகுப்பு புத்தகத்தில் ‘எமர்ஜென்சி’ குறித்த பாடம் அறிமுகம்



புது டெல்லி: என்சிஇஆர்டியின் 9-ஆம் வகுப்பு பாடப் புத்தகத்தில் அவசரநிலை குறித்த பாடம் புதிதாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

'9-ஆம் வகுப்புக்கான சமூகத்தைப் புரிந்துகொள்ளுதல்: இந்தியாவும் அதற்கு அப்பாலும்' என்ற சமூக அறிவியல் பாடப் புத்தகத்தில், இந்தியாவில் 1975-ல் அமல்படுத்தப்பட்ட அவசரநிலை பிரகடனம் குறித்த தகவல்களை தேசிய கல்வி ஆராய்ச்சிமற்றும்பயிற்சி கவுன்சில் (NCERT) அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்திய ஜனநாயகத்தின் பலங்கள் மற்றும் சவால்களை ஆராயும் பாடத்தில், அவசரநிலை பிரகடனமானது "இந்திய ஜனநாயகத்திற்குவிடுக்கப்பட்ட முக்கிய சவால்களில் ஒன்று" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை, அவசரநிலை குறித்த பாடங்கள் 12-ஆம் வகுப்பு அரசியல் அறிவியல் பாடத்திலேயே இருந்தது.சமீபத்திய திருத்தத்தின் மூலம், 9-ஆம் வகுப்பு மாணவர்களும் அவசரநிலைக் காலத்தைப் பற்றி அறிந்துகொள்ளும் வகையில் இந்தப் பாடம் சேர்க்கப்பட்டுள்ளது. என்சிஇஆர்டியின் 9 ஆம் வகுப்பு சமூக அறிவியல் புத்தகத்தில் உள்ள பாடத்தில், "1975-77 காலகட்டத்தில் அவசரநிலை அமல்படுத்தப்பட்டபோது, இந்தியாவின் ஜன நாயகத்திற்கு ஒரு முக்கிய சவால் ஏற்பட்டது. 1970-களின் தொடக்கத்தில், இந்திரா காந்தி தலைமையிலான அரசாங்கத்தின் மீது பொதுமக்களின் அதிருப்தி அதிகரித்து வந்தது. வேலையின்மை அதிகரிப்பு, விலைவாசி உயர்வு மற்றும் நிர்வாகச் சீர்கேடு குறித்த குற்றச்சாட்டுகள் ஆகியவை பரவலான போராட்டங்களுக்கு வழிவகுத்தன.

இதனைத் தொடர்ந்து ஜூன் 1975-ல்,உள்நாட்டு அமைதியின்மை என்ற அடிப்படையில் அரசாங்கத்தால் தேசிய அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டது. இக்கால கட்டத்தில், பெரும்பாலான அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டன, ஊடகங்கள் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டன, ஏராளமான அரசியல்தலைவர்கள் மற்றும் செயல்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டனர். ஜனநாயக அமைப்புகள் கடுமையான நெருக்கடிக்குள்ளாயின மற்றும் மக்களின் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டது.

அரசியல் தலைவரும், சோசலிச சிந்தனையாளருமான ஜெயப்பிரகாஷ் நாராயண் தலைமையிலான மக்கள் இயக்கங்கள், பிஹார் மற்றும் குஜராத்தில் மாணவர்களையும், மக்களையும் ஒன்றிணைத்தன. 1977-ல் அவசரநிலை விலக்கிக்கொள்ளப்பட்டு பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட்டன; இதன் மூலம் மக்கள் தங்கள் விருப்பத்தை வாக்குச்சீட்டு வாயிலாகவெளிப்படுத்த முடிந்தது. இதில் ஆளும் அரசாங்கம் தோல்வியடைந்தது. இது இந்திய ஜனநாயகத்தின் வலிமையை வெளிப்படுத்தியதுடன், ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தையும் உணர்த்தியது," என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொல்கத்தா சேமிப்பு கிடங்கு விபத்து உயிரிழப்பு 10 ஆக அதிகரிப்பு



கொல்கத்தா:

கொல்கத்தா தரதலா பகுதியில் பிரேஸ் பிரிட்ஜ் ரயில் நிலையம் அருகே சேமிப்பு கிடங்கு இடிந்து விழுந்த விபத்தில்உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது.

மேற்கு வங்கம் கொல்கத்தாவில் தரதலா பகுதியில் பிரேஸ் பிரிட்ஜ் ரயில் நிலையம் அருகே கட்டப்பட்டு வந்த 3 அடுக்கு சேமிப்பு கிடங்கு நேற்று முன்தினம் இடிந்து தரைமட்டமானது. இந்த இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது.நேற்று காலை 5 பேர் உயிருடன் மீட்கப்பட்டதால், மீட்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளது.

இவர்களில் 19 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர். இடிபாடுகளில் வேறு யாரும் சிக்கியுள்ளனரா என்பதை கண்டறியும் ராணுவத்தின் ஜிபிஆர் ரேடார் உதவியுடன் தேடும் பணி நடைபெறுகிறது. இது கான்கிரீட் இடிபாடுகளுக்கு உள்ளும் மனிதர்களின் நடமாட்டம், நாடித்துடிப்பு ஆகியவற்றை கண்டறியும். இடிபாடுகளுக்குள் கேமராக்களை நுழைத்து தேடும் பணி நடைபெறுகிறது.

செல்போன் டவர் தரவுகள் மூலமாகவும், இடிபாடுகளுக்குள் யாருடைய செல்போனும் செயல்பாட்டு நிலையில் உள்ளதா என்பதும் கண்டறியப்படுகிறது. இது தொடர்பாக 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மீது மரணத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக கொல்கத்தா போலீஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.


ரூ.2 லட்சம் நிவாரணம்: சேமிப்பு கிடங்கு விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் மோடி,அவர்களது குடும்பத்தினருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.2 லட்சமும், காயம் அடைந்தோர் குடும்பத்தினருக்கு ரூ.50,000-ம் வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

# 'False narrative' to arrest of Champat Rai's aide: How Ram Temple donations row escalated

*What started with an allegation by a Samajwadi Party MLA has snowballed into a full-fledged investigation, the filing of an FIR and the arrest of a close aide of Ayodhya's Ram Mandir Trust General Secretary Champat Rai. It is alleged that donation worth crores made by the Ayodhya temple devotees is now missing, and the Shri Ram Janmabhoomi Trust is under enhanced scrutiny.*

*Among the eight people who have been arrested so far is Ramashankar Yadav, alias Tinnu, an aide to the trust's general secretary, Champat Rai.*

*Opposition parties have also amped up their attack on the government, alleging that many valuables are now missing. Besides, the temple trust received calls from devotees who have started asking about the silver and gold donations, including statues, they made for the Ram temple, according to people familiar with the matter.*



*According to data presented by the Trust's executive committee, it received donations worth 82.78 crore between April 1, 2025, and February 28, 2026. Besides, the Trust earned 138.03 crore as interest from its bank deposits during the same period. It maintains accounts with the State Bank of India and Punjab National Bank in Ayodhya.*

*Allegations of irregularities with the donations emerged earlier this month after Samajwadi Party MLA Pawan Pandey alleged that between 7-7.5 crore in donations had been stolen or embezzled.*

*Other Opposition leaders later joined the chorus and sought transparency in the details of the donations.*

*The BJP-led UP government was quick to dismiss these allegations, terming them a "false narrative".*

*"Those trying to spread rumours about Shri Ram Temple are attempting to create a false narrative. The people of the state understand such politics," deputy chief minister Brajesh Pathak had said, accusing SP chief Akhilesh Yadav of spreading misinformation.*

*Similarly, the temple trust also initially denied the allegations. Things changed after the issue took a legal turn.*

*A lawyer filed a petition on June 12 seeking a probe into the matter, a day after which the Uttar Pradesh government constituted the SIT on a request from the temple trust.*

*Advocate Mohit Ashok, who filed the plea, had reportedly claimed that he moved representations to the Uttar Pradesh Principal Secretary (Vigilance), the Ram Temple Trust, the CBI and other authorities on June 8. According to him, it was after his PIL that the state government ordered the SIT formation. The special probe team was tasked with submitting preliminary and final reports on the donation issue.*

*'200 crore cash stolen'*

*Claims of donations being misplaced are mounting amid the ongoing probe.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.